கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுக.

## ஊடுருவல் தொற்றுகள்

**கோவிட்-19 நோயினால் கடுமையாக நோய்வாய்ப்பட்ட பெரும்பாலான மக்கள் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்ளாமல் இருந்தனர்.**

நீங்கள் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்வது என்பது தடுப்பூசியின் இரண்டு டோஸ்களைப் பெறுவதும் மற்றும் தகுதி பெறும்போது பூஸ்டர் டோஸ்களைப் பெறுவதும் ஆகும்.

### தடுப்பூசிகள் கடுமையான சுகவீனத்துக்கு எதிராகப் பாதுகாக்கின்றன.

ஊடுருவல் தொற்றுகள் நிகழும் போதும், தடுப்பூசி பெற்ற கிட்டத்தட்ட எல்லோரையும் கடுமையாக நோயுறாமல் அல்லது இறந்து விடாமல் தடுப்பூசி பாதுகாக்கிறது.

### கோவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை.

தடுப்பூசி வெவ்வேறு வண்ணங்கள், இனங்கள், வயதுகள் என்பவற்றைச் சேர்ந்த பல நூறு மில்லியன் பேருக்குப் பாதுகாப்பானதென எண்பிக்கப்பட்டுள்ளது. மிதமான பக்க விளைவுகள் சாதாரணமானவையாக இருக்கும் அதே வேளை, தடுப்பூசியினால் கடுமையான பக்க விளைவுகள் ஏற்படுவது அரிதானதாகும், அவையுள்ள பெரும்பாலானோர் குணமடைகின்றனர்.

### கோவிட்-19 தடுப்பூசிகள் நன்கு செயற்படுகின்றன.

உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் சமூகத்தையும் மாறுபட்ட தொற்றுகளிலிருந்து பாதுகாப்பதற்கான சிறந்த வழி, கோவிட்-19 -இன் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்வதுதான்.

நீங்கள் அனைத்து தடுப்பூசிகளையும் போட்டுக்கொள்ளாவிட்டால், நீங்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டு, ஆபத்தான முறையில் நோய்வாய்ப்படுவதற்கோ அல்லது இறந்துவிடுவதற்கோ மற்றும் அதை மற்றவர்களுக்குப் பரப்புவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

### நீர் ஊடுருவும் தொற்றுகளைத் தடுக்கலாம்

நீங்கள் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டு கொண்டு இருந்தாலும், நீங்கள் முகமூடியை அணிந்தால் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் பாதுகாப்பாக இருப்பீர்கள்.

சமூக இடைவெளியைப் பழகுதல், பலருடன் ஒன்று சேர்வதைத் தவிர்த்தல், உங்களது கைகளை அடிக்கடி கழுவுதல் என்பன உம்மையும் மற்றோரையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஏனைய வழிகளாகும்.

உம்மைப் பாதுகாத்துக் கொள்க.
உமது சமூகத்தைக் காத்துக் கொள்க.
தடுப்பூசி பெறுக.

4 Oct 2022

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus